வேளாண்மை - செம்மை நெல் சாகுபடியில் ஒரு பெண்மணியின் முயற்சி



திருமதி. விஜயலஷ்மி, விழுப்புரம் மாவட்டம், விக்ரவாண்டியை சேர்ந்த பெண் விவசாயி. இவர் இப்போது அப்பகுதியின் பெருமைக்குரியவர். இதன் காரணம், அவரது செம்மை நெல் சாகுபடி முறையாகும். இது மற்றவர்களை காட்டிலும் அதிக மகசூல் தந்து வெற்றியரிந்ததேயாகும்.கடந்த சில மாதங்களாக, பல விவசாயிகள் இவரது நிலத்தை ஆச்சரியம் மூட்டும் பார்வையுடன் வலம் வருகின்றனர். மேலும் இவரது வெற்றியின் இரகசியத்தை அறியவும் ஆவலுடன் இருக்கின்றனர். இவையனைத்திற்கும் திருமதி.விஜயலஷ்மி, ஒரே பதில், செம்மை நெல் சாகுபடி யாகும். அப்பகுதியில் இருக்கும் மற்ற விளை நிலங்களை காட்டிலும், இவரது செம்மை நெல் சாகுபடியை காண தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தை சார்ந்த பல ஆராய்ச்சியாளர்களும், பிற அரசாங்க அதிகாரிகளும் மாவட்ட ஆட்சியரும் வந்த வண்ணம் உள்ளனர்.

திருமதி.விஜயலஷ்மி, முதல் செம்மை நெல் சாகுபடி விவசாயியான இவர் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக அதிகாரிகளுடன் இணைந்து வெற்றிகரமாக செம்மை நெல் சாகுபடி மேற்கொள்கிறார். இதற்கான முதற்படியாக, ஒரு ஹெக்டர்க்கு 3 கிலோ விதை விகிதம் பாய் நாற்றங்கால் எழுப்பினார். ஒரு புதிய முயற்சியாக பாலிதீன் பைகளுக்கு மாறாக வாழை இழைகளை நாற்றங்கால் அமைக்க உபயோகிக்கப்பட்டது.பதினான்கு நாட்கள் இச்சூழலில் வளர்ந்த செடிகளை, ஒவ்வொரு செடிகளுக்கும் 22.5 x 22.5 செ.மீ. இடைவெளியில் நடவு செய்யப்பட்டது. மேலும் ஒரு நாள் இடைவெளியில் பாசனமும் மேற்கொள்ளப்பட்டது.கோனோ வீடர் (cono weeder) மூலமாக களை கட்டுப்படுத்தப்பட்டது. நாட்கள் செல்ல தூர்விடுதல் மூலமாக, பயிர் வளர்ச்சியின் வெற்றி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. அதிகபடியாக 110 தூார்கள் கணக்கிடப்பட்டுள்ளது.வராகநதி வடிகால் பகுதியில், ஒரு ஹெக்டேரில் அதிக மகசூலாக 7.36 டன் சாகுபடி செய்துள்ளார். இவ்வாறாக செம்மை நெல் சாகுபடியில் பல வெற்றிகளை காண்கிறார் இவர்.

**தொடர்புக்கு:**

திருமதி.விஜயலஷ்மி,

விக்ரவாண்டி, விழுப்புரம் மாவட்டம்,

தமிழ்நாடு - 605 602அலைபேசி: 9790238445